<u>உதவி அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

**SC .No.87/2016**

**29.07.2026**

**பெயர்** : **அருள்முருகன் (Dw1 )**

**த/பெ.** : **ஜெயராமன்**

**வயது** :

**தொழில்** : **தலைமை காவலர்**

**முகவரி** : **உடுமலைப்பேட்டை**

<u>எதிரிகள் தரப்பு முதல் விசாரணை</u>

அமர்வு வழக்கு எண் S.C.No. 97/2016 ல் நான் நீதிமன்றத்தில் அரசு தரப்பு சாட்சியாக அ.சா.6 ஆக விசாரிக்கப்பட்டுள்ளேன். **என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அ.சா.6 ன் சாட்சியத்தின் சான்றிட்ட நகல் என்று சொன்னால் அது சரிதான். அந்த சாட்சியத்தின் சான்றிட்ட நகல் எ.சா.ஆ 1 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. அந்த சாட்சியத்தில் இந்த வழக்கின் 4 ம் எதிரியும், அந்த வழக்கின் 1 ம் எதிரிக்கு கல்லு பாலன் என்கிற பாலசுப்பிரமணியத்திற்கு பாதுகாவலராக (Gunman) இருந்து வந்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் அது சரிதான். அதே சாட்சியத்தில் 30.03.2014 ம் தேதியன்று கல்லுபாலன் என்பவர் அவரது நண்பர் தோட்டத்திற்கு சென்றார் என்றும், அவர் அங்கு தான் இரவு 10 மணிவரை அவருடன் இருந்து வந்ததாக தான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் அது சரிதான்.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

ஓம்/–மு.தனபால்
உதவி அமர்வு நீதிபதி,
உடுமலைப்பேட்டை